DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 243/2019

Deposition of witness for P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | : ரங்கநாதன் | Caste | : |
| Father/Husband Name | : S.R.K. ராவ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 16-06-2022

முதல் விசாரணை

நான் KAS நகரில் குடியிருந்துகொண்டு தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். 11.11.2018 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும் எனது நண்பர் ஸ்ரீதரும் EPP நகர் பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது போலீசார் அங்கு ரோந்து வந்தனர். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்தனர். விசாரித்ததில் அவர் பெயர் பாபு என தெரிவித்தார். ஆஜர் எதிரி தான் அந்த நபர். எதிரி திண்டலில் இருந்து பரிமளம் மஹால் திருமண மண்டபம் அருகே ஒரு பெண்மணியும் அவரது கணவரும் சென்றுகொண்டிருந்ததாகவும் அப்போது செயினை பறித்ததாகவும் தெரிவித்தார். எதிரியை கைது செய்து வாக்குமூலத்தை பெறும்போது தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள். அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். செயினை திருடியதை ஒப்புக்கொண்டார். அவரிடமிருந்து இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார். அதேபோல் எதிரி தனது பாக்கெட்டிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த 5 பவுன் தாலிக்கொடியை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினர். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ 2 ஆகும். கைப்பற்றப்பட்ட நகையின் புகைப்பட நகல் ஏற்கனவே சாபொ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் அந்த நகை. போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி வழக்கறிஞர் ஆஜராகியுள்ளபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.